தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 18, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 ஏப்ரல் 1, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

பயனளிக்காத சொற்களை விடுத்து, மனதில் பதிந்து பயனளிக்கக்கூடிய சொற்களையே அனைவரும் கூறவேண்டும்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி சி. குழந்தை அம்மாள் அவர்கள் 27-3-2002 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சி. குழந்தை அம்மாள் அவர்கள் 1957-1962 மற்றும் 1962-1967 ஆகிய ஆண்டுகளில் சூளூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த முன்னாள் உறுப்பினர் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

41—

மேல்நிலைப் பள்ளிகளாக்குதல்

***3252—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட ஐந்து உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த கோயம்புத்தூர் மாநகராட்சி உரிய கட்டணத்தைச் செலுத்திய பின்பும் உயர்த்தப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஐந்து உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் 3 மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் 2001-2002 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள 2 மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் குறித்து, வரும்